இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைக
சோபிக்க சோப
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 28 திங்கட்கிழமை (13 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 17

# பருவமழை முடிந்த பின்னர் வடக்கில் பெரும் தாக்குதல்!

## இராணுவ நிபுணர்கள் நம்பிக்கை

கொழும்பு, டிசம்பர் 13

வடக்கில் பருவமழை முடிந்த கையோடு ஜனவரியில் பாதுகாப்புப் படையினர் பெரும் — பாரிய — தாக்குதல் ஒன்றை நடத்துவர்; இவ்வாறு இராணுவ நிபுணர்கள் பலர் நம்புகின்றனர் என்று பி.பி.ஸி. ஆய்வுக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

''யாழ்ப்பாணம் மீது நடத்தப்படும் விமானக் குண்டுத் தாக்குதல்கள்'' என்ற தலைப்பில் ஆய்வுக் கண்ணோட்டம் ஒன்றை கொழும்பில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் சியாக்கோ நாஸ் அனுப்பி இருந்தார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

வடபகுதியில் விமானப் படையினர் நடத்தி வரும் குண்டுத் தாக்குதல்களில் கடந்த ஒரு மாதகாலத்தில் 40 பேர் வரை கொலைப்பட்டனர். பூநகரி முகாமை விடுதலைப் புலிகள் அழித்ததற்குப் பழிவாங்கு முகமாக இவ் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

அரசு வடபகுதியினுடனான செய்திப் போக்குவரத்தைத் துண்டித்து விட்டாலும் பயணிகள், நிவாரணப் பணிப்பாளர்கள், அங்கு வெளியாகும் பத்திரிகைகள் போன்றவை மூலம் செய்திகள் தெற்கே எட்டுகின்றன.

வடபகுதியில் பருவ மழை தொடங்கி விட்டது. கடந்த 10 ஆண்டுகளில் பெய்த மிக மோசமான மழை இது எனக் கூறப்படுகின்றது.

யாழ். மற்றும் முல்லைத் தீவுப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது நூற்றுக் கணக்கானோர் வீடு வாசல்களை இழந்திருப்பதாக நிவாரணப் பணியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் மக்களுக்கு பெரும் ஆபத்தாக இருப்பது மழை அல்ல; போர் தான் அச்சுறுத்தலாக உள்ளது.

பூநகரி தாக்குதல் மாபெரும் வெற்றி என விடுதலைப் புலிகள் கூறிவரும் வேளையில்— படையினர் வெகு சீக்கிரம் பதிலடித் தாக்குதல் நடத்துவார்கள் என்பது நன்றாகத் தெரிந்த மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

அப்பாவி மக்கள் கொலை

போராளிகளின் இலக்குகளை மட்டுமே தாக்கி வருவதாக இராணுவத் தளபதிகள் கூறுகின்றனர். ஆனால் விடுதலைப் புலிகளும் மக்களும் அருகருகே வாழும் இப்பகுதியில் மீண்டும் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருவதாக செய்திகள் கோடி காட்டுகின்றன.

யாழ் தீபகற்பம் மிக மோசமாக அதிகரித்துள்ள குண்டுத் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் கண்டு வருகிறது.

இத்தாக்குதல் சம்பவங்களை அரசு தரப்புப் பயங்கரவாதம் என்று ''ஹொட்ஸ்ஸ்பிரிங்'' விவரித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றி விழா கூட்டம் இன்று பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், டிச. 13

பூநகரி கூட்டுத்தளத்தின் மீதான 'தவளை' தாக்குதலின் வெற்றி நாளின் இறுதி நாளான இன்று பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை பழைய பஸ் நிலையப் பகுதியில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது

பொதுக் கூட்டம் ஆரம்பமாகும் முன்னர் அணிவகுப்பு இடம்பெறும்.

விடுதலைப் புலிகளின் அணிவகுப்பு இன்றுகாலையில் ஆரம்பமாகி பழைய பஸ் நிலைய மைதானத்தைச் சென்றடையும்.

அதனைத் தொடர்ந்து, மைதானத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான பந்தலில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மாலை நிகழ்வுகளாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் வில்லிசை, நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஓ-5-87)

## மக்கள் பார்த்து ரசித்த வெற்றித்தீப ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிச. 13

பூநகரி கூட்டுத்தளத்தின் மீதான 'தவளை' தாக்குதலின் வெற்றி விழாவையொட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து வெற்றித்தீபம் ஏற்றும் நிகழ்ச்சி அங்கு இடம்பெற்றது.

பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும், யுவதிகளும் வெற்றித் தீபங்களை தாங்கியவாறு நல்லூர் வைமன் வீதிப் பகுதியில் இருந்து அணியாக யாழ். பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தனர். பின்னர் அங்கு பெரியளவிலான பொதுத் தீபம் ஒன்று ஏற்றப்பட்டது அப்போது அங்கு திரண்டிருந்த மக்கள் தங்கள் வலது கைகளை உயர்த்தி ''வெற்றி வெற்றி'' எனக்கோஷமிட்டனர்.

வெற்றித்தீப ஊர்வலம் சென்ற வழிகளில் மக்கள் கூடி நின்று ஆர்வத்துடன் அதனைப் பார்த்தனர்

வீதிகளில் திரண்டு நின்ற மக்களுக்கு கற்கண்டும் வழங்கப்பட்டது. (ஓ-5-15-162)

## வானில் பிரகாசமாக பறந்த வெளிச்சக்கூண்டுகள்!

யாழ்ப்பாணம், டிச. 13

நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் பூநகரி வெற்றிவிழா கூட்டம் நடந்து முடிந்த கையோடு, அடுத்தடுத்து பல வெளிச்சக் கூண்டுகள் வானில் பறக்க விடப்பட்டன.

இந்த வெளிச்சக் கூண்டுகள் பிரகாசமான ஒளியுடன் வானில் அசைந்து மிதந்து சென்றதை மக்கள் பரவசத்துடன் கண்டு களித்தனர்.

வெளிச்சக் கூண்டுகளில் அநேகமானவை தீவுப் பகுதிப் பக்கமாக வானில் உயரத்தில் பறந்து சென்றன.

இதேபோல் நேற்று முன்தினம் மட்டுவிலில் நடந்த வெற்றி விழா கூட்டத்தில் வைத்தும் வெளிச்சக் கூண்டுகள் பறக்க விடப்பட்டன. (ஓ-5-15)

### முச்சந்தி முனி



தீவுப் பகுதியிலை நிற்கிறவைக்கு வெளிச்சக் குண்டு திகிலை ஏற்படுத்தியிருக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## வெருகலில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், டிச 13

மட்டக்களப்பு மாவட்டம், வெருகலில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

பதுங்குகுழி ஒன்றில் இருந்த படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் மேலும் பல படையினர் காயமடைந்தனர் என இராணுவத் தலைமைப் பீடம் அறிவித்தது. (ஓ-5)

## அறிவாலயத்தை கைப்பற்ற முயற்சி

சென்னை, டிச. 13

சென்னை அண்ணா சாலையில் உள்ள தி.மு.க.தலைமை அலுவலகமான 'அறிவாலயம்' கட்டடத்தை விரைவில் கைப்பற்றப் போவதாக வை. கோபாலசாமி அறிவித்துள்ளார்.

அறிவாலயம் தி.மு.கவுக்கு சொந்தமானதல்ல; அது ஒரு தனிப்பட்ட அறக்கட்டளைக்குச் சொந்தமானது என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருப்பதை வை. கோ. கண்டித்ததுடன்—

அக்கட்டடம் தி.மு.க. தொண்டர்களின் பணத்தில் கட்டப் பட்டது என்றும் தெரிவித்துள்ளார் (ஓ-எ)

## கருணாநிதி - வை. கோ. ஆதரவாளர்கள் மோதல்

### பொலிஸ் தடியடி; 100 பேர் காயம்

சென்னை, டிச. 13

நேற்று முன்தினம் இரவு திருச்சி மாவட்டம் — மிளகுப் பாறை என்னுமிடத்தில் கருணாநிதியின் ஆதரவாளர்களுக்கும் வை. கோ. வின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலை அடக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் தடியடியும் நடத்தினார்கள். அதில் சுமார் 100பேருக்கு மேல் காயமடைந்தனர்.

வை. கோவின் ஆதரவாளர்கள் தி.மு.க.வின் கொடியை ஏற்றப்போவதாக அறிவிக்க கருணாநிதியின் ஆதரவாளர்கள் அதனை எதிர்த்தனர்.

வை. கோவின் தலைமையில் குறிப்பிட்ட இடத்துக்கு ஊர்வலம் ஒன்று வந்தபோது கருணாநிதியின் தொண்டர்கள் அந்த ஊர்வலத்தில் வந்தவர்களைத் தாக்கினார்கள். அதனை அடுத்தே பொலிஸார் தலையிட்டனர். கருணாநிதியின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

இதனைக் கண்டித்ததுடன் பொலிஸார் ஒரு பக்கச் சார்பாக நடப்பதாக தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகன் அறிக்கை வெளியிட்டார்.

## இந்து ஆலயங்களில் வெற்றி நாள் பூசைகள்

யாழ்ப்பாணம், டிச. 13

பூநகரி கூட்டுப்படைத் தளத்தை அழித்து விடுதலைப் புலிகள் பெற்ற பெருவெற்றியை வாழ்த்தி இந்து ஆலயங்களில் விசேட பூசைகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று நல்லூர் சிவன் கோயிலில் தலைவர் திரு. பிரபாகரனுக்கு ஆசி வேண்டியும், பூநகரி வெற்றியை வாழ்த்தியும் ஜெபஹோம அபிஷேகமும் விசேட பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

இந்துமத குருமார் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

தொடர்ந்தும் பல ஆலயங்களில் போராளிகளுக்கு ஆசி வேண்டி விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-111)

# இராணுவ ரீதியாக பலவீனமானால் தமிழர்கள் அழிக்கப்படுவது திண்ணம்

### வெற்றி விழா கூட்டத்தில் பொட்டு அம்மான் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிச. 13

தமிழினத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு என்பது அதன் இராணுவ வலிமையிலேயே இன்று தங்கியுள்ளது. எமது இராணுவ பலம் அதிகரிக்குமானால் பாதுகாப்பாக இருப்போம். மாறாக நாம் இராணுவ ரீதியாகப் பலவீனமடைவோமானால் அழிக்கப்படுவோம். இந்த உண்மை நீண்டகாலமாக இங்கு நிரூபிக்கப்பட்டு வருகிறது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டு அம்மான் இவ்வாறு தெரிவித்தார்.

பூநகரித் தளம் மீதான தவளைத் தாக்குதலின் வெற்றி நாளையொட்டி யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று மாலை நடந்த விழாவில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழத்தில் தமிழர் நடத்தும் போராட்டம் உலகெங்கும் உள்ள தமிழ் மக்களுக்கு பாதுகாப்புக் கவசமாக என்றும் விளங்கும். எமது இராணுவ வலிமை உலகெங்கும் உள்ள தமிழர்களைப் பாதுகாக்கும் என்பது உண்மை.

1988 ஆம் ஆண்டு எமது தலைவர் கொல்லப்பட்டதாக உலகெங்கும் ஒரு செய்தி இந்திய அரசால் பரப்பப்பட்டது. அந்த வேளை இந்தியாவின் பெங்களூர் நகரில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். காரணம் அங்கு யாருக்கும் உடனடியாகத் தெரியவில்லை.

பின்னர் தாக்கப்பட்ட ஒரு சில தமிழர்களைக் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் ''உங்கள் பாதுகாப்புக்குரிய பிரபாகரன் இறந்து விட்டார். இனி உங்களுக்கு யார் பாதுகாப்பு?'' எனக் கேட்டு அவர்கள் தம்மைத் தாக்கியதாகக் கூறினர். இரண்டு நாட்களின் பின் பிரபாகரன் இறக்கவில்லை, இந்திய செய்தி தவறு என்று உலகச் செய்தி நிறுவனங்கள் திரும்ப அறிவித்தன. அதனை அடுத்து தமிழர் மீதான தாக்குதல் அங்கு நிறுத்தப்பட்டது.

புலிகளின் இராணுவ ரீதியான வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த தமிழினத்தின் பாதுகாப்பு வளர்ச்சியின் ஓர் புதிய பரிமாணம் என்பதை ஒவ்வொருவரும் ஞாபகம் வைக்க வேண்டும்.

சண்டை தொடங்கியது எப்போது?

பூநகரி தளம் மீதான தாக்குதல் 11 ஆம் திகதி அதிகாலை 1.45 மணிக்கு ஆரம்பித்ததாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டை கைப்பற்றி தமிழ் மக்களை அழித்துவிட சிங்கள ராணுவம் முனைப்பு

### சிறப்புத் தளபதி பேச்சு

யாழ்ப்பாணம், டிச. 13

பூநகரித் தோல்வியின் பின் எதிரி இனியொரு படையெடுப்பை எம் மீது நடத்த மாட்டான் என நாம் நினைப்போமானால் பேரழிவையே சந்திக்க வேண்டி வரும். எப்படியாவது குடாநாட்டைக் கைப்பற்றி மக்களை அழித்து விட வேண்டும் என்ற முனைப்புடனேயே சிங்கள இராணுவமும், அரசும் இப்போதும் உள்ளன.

— யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா நேற்றைய வெற்றி விழாக் கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரிச் சமரில் வீரச்சாவடைந்த 458 போராளிகளுக்குப் பின்னால் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது ஒவ்வொரு சாதனை இருக்கிறது.

இந்தச் சண்டையிலே என்ன நிலையில் நின்று போராடினோம். ஏன் நாங்கள் அந்த நிலைகொள்ள முடியாமல் போனது என்பது குறித்து இங்கு சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

பூநகரித் தாக்குதலில் பெரு வெற்றி பெற்றும் கேரதீவு— சங்குப்பிட்டிப் பாதையால் போக்குவரத்து செய்ய முடியவில்லையே என்ற மயக்கம் மக்கள் மத்தியில் உள்ளது.

நிலை கொள்ள முடியாதது ஏன்?

மிகப்பெரிய கூட்டுத் தளத்தை அழித்த எம்மால் அந்தப் பாதையில் நிலை கொண்டிருக்க முடியும். அந்தப் பிரதேசத்தை எம்மால் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

இந்தச் சமரில் 458க்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆயிரக்கணக்கான போராளிகள் காயமடைந்தனர் எதிரியிடமிருந்து பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## றுகுணு, மார்கோ கப்பல்கள் காங்கேசனில் தரிப்பு

றுகுணு, மார்கோ ஆகிய இரு கப்பல்களும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வராது. தொடர்ந்து காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது வாதுவ கப்பலில் இருந்து மா மூடைகள் இறக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஏனைய கப்பல்களில் இருந்தும் பொருள்கள் இறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக இன்னும் நான்கு தினங்களின் பின்னரே வாதுவ கப்பல் கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-173)

## குண்டு வீச்சுக்கு இலக்கான யாகப்பர் தேவாலயம் நத்தார் வாழ்த்து மடலில்

குருநகர், டிச. 13

''சுப்பர் சொனிக்'' விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்துள்ள குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலய தோற்றம் அச்சிடப்பட்ட நத்தார் வாழ்த்து மடல்கள் இன்று திங்கட்கிழமை வெளிவரவிருக்கின்றன. பங்குத் தந்தை வண. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் நேற்று தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையின்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

மூவர்ணத்தில் 'ஒவ்செற்' முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ள நத்தார் வாழ்த்துமடல்களால் ஆலயம் சிதைக்கப்பட்டுள்ள செய்தியை உலக நாடெல்லாம் பரவச் செய்யும் நோக்குடனேயே வாழ்த்து மடல்கள் இவ்வாறு தயாரிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அனைத்து மக்களும் இம்முறை இந்த வாழ்த்து மடல்களை வாங்கிப் பயன்படுத்தும் முகமாக பதிப்பிக்க செலவான விலையிலும் மலிவாக மடல் விற்பனைக்குவிட இருப்பதாகவும் அறியப்படுகிறது. (அ-51)

# பூநகரி கூட்டுத்தள மாதிரியை பார்வையிட அலைமோதும் மக்கள்!

### புலி வீரர்களின் தாக்கி அழிக்கும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது

அச்சுவேலி, டிச. 13

வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூநகரி கூட்டுப்படைதளத்தின் மாதிரி அமைப்பை மக்கள் திரண்டு வந்து பார்வையிடுகின்றனர். பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை தங்களை மறந்த நிலையில் அங்குள்ள காட்சிகளை மெய்சிலிர்க்கப் பார்த்து ரசிக்கின்றனர்.

காலை முதல் இரவு வரை மக்கள் கூட்டம் அங்கு அலைமோதுகிறது.

அங்கு புலிவீரர்கள் நிலை எடுத்து முகாமைத் தாக்கி அழிக்கும் கண்கொள்ளாக் காட்சி பிரமிப் பூட்டுவதாக உள்ளது.

பல கிலோ மீற்றர் தூரத்திற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கி கூட்டுப்படைத்தள மாதிரி அமைப்பும் அவற்றுடன் தொடர்பான காவல் அரண்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கடல் நீரேரி, சதுப்பு நீர் நிலை வயல் நிலப்பரப்பு ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருந்த பூநகரி கூட்டுப் படைத்தளத்தை சுற்றிவளைத்து தமிழீழ விடுதலைப் புலி வீரர்கள் தாக்கும் காட்சிகளையும், இராணுவ இழப்புகளையும் மக்கள் கூட்டம் மெய்மறந்த நிலையில் பார்த்துக் கொண்டிருப்பதையும் புலி வீரர்களின் வீரத்தை புகழ்ந்து பாராட்டுவதையும் காணக் கூடியதாக உள்ளது.

நாகதேவன்துறை கடற்படைத்தளம், [illegible] இராணுவமுகாம், கடற்படைத்தளத்தின் தொ[illegible] றுடன் கூடிய காவல் அரண்கள் கடற்படையின் நீருந்து விசைப்படகுகள், இராணுவ முகாமின் மின்சார வேலி அமைப்பு, பல்வேறு வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ள காவல் நிலைகள் ஆகியவற்றையும், முகாமிற்குமிக அண்மையில் புலி வீரர்கள் நிலையெடுத்து தாக்கி அழிப்பதும் மிகவும் தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

[illegible] இராணுவத்தினர் ஆகியோரின் சிரு [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் கோழி முட்டைகள், வான்கோழி முட்டைகள், எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28411)

### மலிவு விற்பனை

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-6584)

### தேவை

பக்கம் கட்டும் அனுபவமுள்ள அச்சுக் கோர்ப்பாளர் (ஆண்) தேவை. தகுதியுள்ளவர்கள் நேரில் வரவும். சோதி அச்சகம் (மக்கள் கடைக்கு அருகில்) கச்சாய்வீதி, சாவகச்சேரி. (சி-6695)

### புலமைப் பரிசில் வகுப்பு

ஆண்டு 5 புலமைப்பரிசில் 1994 கல்வியாண்டின் வகுப்புகள் 14 - 12 - 93 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகும். ஆசிரியர் அம்பிகைபாகன். சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28380)

## 33 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, டிச. 13

சப்-இன்ஸ்பெக்டர்கள் 33 பேர் பொலீஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர்தான் தமிழர்.

இது தமிழ் சப்-இன்ஸ்பெக்டர்களிடையே விரக்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-3)

---

ஆண்டு - 5
**புலமைப் பரிசில்** (1994)
புதிய வகுப்பு

ஆரம்பம்:
14 — 12 — 1993
(செவ்வாய்)
காலை 8 30 மணி

**நாவலர் கல்விக் கழகம்**
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.
(28414)

---

வடமராட்சியில்
இங்கு மட்டுமே!
**A/L 93** இல்
பரீட்சை எடுத்த
மாணவருக்கான
**DAY CLASS**
ஆரம்பம்:
**14 - 12 - 1993**
செவ்வாய் 12மணி

பௌதீகவியல் —
க. கலாகரன்
மா. லோகசிங்கம்
கணக்கியல் —
S. K. பிரபாகரன்
அளவையியல் —
விக்கி
வர்த்தகம் —
இரட்ணம்
பெரதன்
இந்துநாகரிகம் —
ஜோதீஸ்வரன்
தமிழ் —
அமரசிவம்

**MATHS CENTRE**
நெல்லியடி
M. M. V. வீதி
நெல்லியடி.
(சி 6596)

---

# BECON

யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASSES

கலை, வர்த்தகம்

**புதிய பிரிவு**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | S வரதராஜன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| அளவையியல் | — | மனோகரன் |

**ஆரம்பம்: 14 - 12 - 1993**
செவ்வாய் 8-00 a. m.

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
★ முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி-6676)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முத்தர் இரத்தினம்

மலர்வு: 02-10-1905 — உதிர்வு: 06-12-1991

திதி: 13 - 12 - 1993


என்றும் எம் நெஞ்சங்களை விட்டகலாத எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

83/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (28394)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சதிரவேலு சுப்பிரமணியம்

[ஸ்தாபகர் - இராசம் மோட்டார் ஸ்ரோர்ஸ்]

மண்ணுலகில்: 15 — 01 — 1927 — விண்ணுலகில்: 01 — 12 — 1986

திதி 13 - 12 - 1993

எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து அன்பு செலுத்திய உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள், மருமக்கள்

12, கந்தபுராண வீதி,
(28378)

---

வட இலங்கை
## தொழில் நுட்பக்கல்லூரி
### புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்

## INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE

**ஆரம்பம்: 14-12-1993**

இத்துடன்
1) Word Processing
2) Spread Sheet
3) Graphics
4) Communication
5) Data Base கான மேலதிக செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்

காலை மாலை வார நாள் வகுப்புகள்

விபரங்கட்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE,
JAFFNA.

(சி-6594)

---

கலை ஊடக இணைய காரியாலய
## அங்குரார்ப்பணம்

15 12—1993 புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் யாழ்ப்பாணம் 117, மானிப்பாய் வீதியிலுள்ள ஐந்து சந்தியில் "கலை ஊடக இணைய" காரியாலயம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படும்.

வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஒடியோ நாடா விநியோகஸ்தர்கள் மற்றும் சகலரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

- கலை ஊடக இணையம்.

குறிப்பு:
இணையத் திறப்பு விழாவை தொடர்ந்து, இம் மாதம் 31ஆம் திகதி வரை அங்கத்தவ பதிவுகள் நடைபெறும். தவறாது பதிவு செய்து கொள்ளவும். (28413)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சண்முகம் மார்க்கண்டு

மலர்வு: 10 — 03 — 1912
மறைவு: 13 — 11 — 1993

கடந்த 13-11-1993இல் அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் திரு. சண்முகம் மார்க்கண்டு அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை இன்று 13-12-1993இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாருக்கு இறுதிவரை சகல வகையிலும் உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும், Central Nursing Home வைத்தியர்கள், ஊழியர்கள் மற்றும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி கிரிதரன்,
(மகன், மருமகள்)
(28397)

---

## மண்டேலா - கிளேர்க் நோபல் பரிசு பெற்றனர்

ஒஸ்லோ, டிச. 13

1993 ஆம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசை தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி கிளேர்க்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவும் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டாகப் பெற்றுக்கொண்டனர்.

இது சம்பந்தமான வைபவம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்றது. தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் இனவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவும் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தலை நடத்தவும் இருவரும் மேற்கொள்ளும் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் இந்த ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. (இ-எ)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

நிஜமான சுவடுகள்:
18 — 10 — 1966

நிழலான சுவடுகள்:
13 — 12 — 1992



### செல்வி வாசுகி மனோகரா

நடையில் பிணங்களாக உன் நினைவுகளோடு
பாச உணர்வுகளைத் தூண்டிய வேதனையில்
பேச எழுந்த உன் கல்லறைக் காவியங்களை
நேச உள்ளங்கள் உணரத் துடிக்கையிலே
இதயம் உடைந்துடைந்து ஒட்டப்படுகின்றன.

நண்பர்கள்
D/A-1991
(28418) யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

---

## எம் நினைவுகளில் நீ



மலர்வு: 28 02 1965 — உதிர்வு: 13 12 1992

### அமரர் சி. யோகநாதன்

(நாவற்குடா, மட்டுநகர்)

சித்த மருத்துவனாகி சிறப்பாக
சேவை செய்யவென்று
மட்டு நகரிலிருந்து பல இன்னல்கள்
தாண்டி வந்து
சிகரம் கற்றுவந்த எமது தோழனே
எதிர்பாராத விதமாக
உன்னை இழந்து விட்டோம்
நாம் பழகிய பசுமை நிறைந்த நாட்களில்
என்றும் உன் நினைவுகள்
எம் இதயங்களில் நிழலாடும்.

நண்பர்கள்,
சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்,
கைதடி.
(28416)

---

## நெஞ்சங்களின் நினைவுகளில் 31ஆம் நாள்



மலர்வு: 13 — 02 — 1914 — உதிர்வு: 13 — 11 — 1993

### அமரர் கந்தையா சாதாசிவம்

திதி: 13 - 12 - 1993

மகனைப் பிறந்து நின்று
மண்ணில் மனிதனாய் வளர்ந்துயர்ந்து
தகவில் பெரியனாகிய தந்தையே
உமது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
துயர் தணியாமல் தவிக்கின்றோம்.

திரு திருமதி சிவசக்திநாதன்
திரு திருமதி சதாசக்திநாதன்
செல்வி சிவசக்தி சதாசிவம்
திரு திருமதி கேதீஸ்
திரு திருமதி காசிநாதன்
(28421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## விழிப்பாக இருப்போம்

ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவின் ராஜினாமாவை ஜனாதிபதி விஜேதுங்கா ஏற்றுக் கொண்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பூநகரித் தோல்வி ஸ்ரீலங்கா இராணுவத்திற்குக் கிடைத்த சரித்திர அவமானத் தோல்வி. அதனை உடனடியாக ஒப்புக் கொள்ள அரசாங்கப் படை உயர் அதிகாரிகளும் அரசாங்க அரசியல் உயர்பீடத்தினரும் முதலில் தயங்கினர். தோல்வி எப்படி வந்தது. யார் பொறுப்பு என்பனவற்றை ஆராய்வதிலும், பெரும் தோல்விக்குப் பதிலாக தமிழர்களைப் பழிவாங்குவதிலும் கவனம் செலுத்தினரே அன்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளப் பின்னடித்தனர்.

எனினும் தோல்வி ஏற்பட்டுச் சரியாக ஒரு மாத காலத்தின் பின்னர், விடுதலைப் புலிகள் வெற்றி விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இராணுவத் தளபதியின் ராஜினாமா உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இது அரசாங்கம் தனது தோல்வியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டதற்குச் சமமானதாகும்.

யுத்தத்தில் வெற்றிவாகை சூடித் தமிழர்களை அடிமை கொள்ளும் தகுதியும் திறமையும் வாய்ந்தவர் என்று கருதப்பட்டு இராணுவத் தளபதி பதவிக்கு நியமிக்கப்பட்டவர் சிசில். அவரும் பதவிக்கு வந்த புதிதில் மட்டுமன்றி, தள நிலைமையை அனுபவ ரீதியாகக் கண்ட பின்னர் சமீபத்திலும்கூட, யுத்தத்தை வென்றுவிடப் போவதாக வீரப்பிரதாபங்கள் பேசினார்.

யுத்தத்தில் இத்தனை மாதங்களில் வெல்வோம், இன்னின்ன இடங்களைப் பிடித்துவிடுவோம் என்றெல்லாம் கூறி அரசாங்கத்துடன் சேர்ந்து சிங்கள மக்களை ஏமாற்றினார். அதனால் அவரே முதலாவது பலிக்கடாவாகிவிட்டார் அது வேறு கதை.

பூநகரித் தோல்வியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்ட பின்னராவது தமிழர் பிரச்சினையை அதன் உண்மையான வடிவத்தைப் பார்க்கும் விதத்தில் சிங்களத் தலைவர்களின் சிந்தனை மாறுமா என்றால், அதுதான் இல்லை! அதற்கான அறிகுறியும் இல்லை!

இராணுவத் தீர்வின் வழி சென்று பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது என்ற உண்மையை உணர்ந்து கொள்ளும் பக்குவம் அரசுக்கு இன்னும் வரவில்லை. அதற்கு மாறாக, இராணுவத் தீர்வு மூலமே தமிழர்களை அழிக்கலாம், அதில் வெற்றி காணலாம் என்ற எண்ணத்தைச் சிங்கள மக்கள் மனங்களில் பதியச் செய்வதிலேயே அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. கடந்த ஒருமாத காலத்தில் அரசின் செயற்பாடுகள் அனைத்தும் அதனை நாடியே இடம்பெறுகின்றன.

தோல்வி தான் வெற்றியின் தூண் என்ற கருத்தை முன் வைத்து அரசு செயற்படக் கூடும். ஆனால் விடுதலைக்காகப் போராடும் ஓர் இனத்திடம், திரமிக்க அதன் போராட்ட இயக்கத்திடம் இந்தக் கருத்துச் செயற்பட முடியாது என்பதனை அரசு புரிந்து கொள்ள வேண்டும். தனது மூடிய கண்களைத் திறந்து சூழ உள்ள உலகத்தை அகலப் பார்க்கட்டும். அப்போதுதான் அதற்குவிடுதலை வேட்கை கொண்ட இனங்கள் தோற்பதில்லை வெற்றி கண்டே வருகின்றன என்பது தெரியும். அடக்குமுறை என்ற அதர்மத்தை ஒழிப்பதில் சிறுபான்மை இனங்கள் வெற்றிவாகை சூடுவது தெரிய வரும். கொழும்புச் சிங்கள அரசு கண் திறந்து பார்க்குமா? புத்தி வருமா?

அதற்குப் புத்தி வருகிறதோ இல்லையோ, தமிழர்கள் விழிப்பாகவும் மன உறுதி தளராமலும் தீவிரமாகப் போராட வேண்டிய காலம் இது தான். தாம் பெற்ற வெற்றியை உறுதி செய்வதற்கு அதனை அத்திவாரமாக்குவதற்கு, இனிமேல் சிறிய தோல்வியும் ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும். ஒற்றுமையும் அவதானமும் பங்களிப்பும் ஒருசேர வேண்டும்.

# விடுதலைக்கு அடிக்கல் நட்டுள்ள பூநகரி வெற்றி!

பூநகரிச் சமர்.

தமிழீழத்தில் நிகழ்ந்த சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமர்.

படை அமைத்தலில், படை இணைத்தலில், படை நகர்த்தலில் இது ஒரு புதிய பரிமாணம்.

போர் முறைக்கும், போர் யுத்திக்கும், போர்த் திறனுக்கும் இது ஒரு புதிய படிக்கல்.

புலிகளின் படையணிகள் ஒன்றிணைந்து, தேசிய ரீதியில் அணிசேர்ந்து, எதிரியைச் சந்தித்த பெரும் சமர். உலக வரலாற்று ஏட்டில் ஒப்புவமையற்ற போர் நிகழ்வாக இந்தச் சமர் பதிவைப் பெறுகிறது.

இந்தப் போர் நிகழ்வை திட்டமிட்டு நெறிப்படுத்திய பெருமை எமது தலைவனைச் சாரும். ஓய்வின்றி, உறக்கமின்றி, ஒருமுக நோக்குடன் ஓராண்டு காலமாக கட்டி எழுப்பிய

> பூநகரி கூட்டுப்படைத் தளத்தை தாக்கி அழித்த விடுதலைப்புலிகளின் தவளைப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் விவரங்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
>
> பூநகரியில் களம் கண்ட வரலாற்று நாயகர்கள் என்ற தலைப்பில் இந்த நூல் வெளியாகி உள்ளது. இந் நூலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தின் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதனை இங்கு மறு பிரசுரமாகத் தருகின்றோம்.

திட்டம் பூநகரியில் பூகம்ப நிகழ்வாகச் செயல்வடிவம் எடுத்தது.

எதிரியின் இரும்புக் கோட்டைக்குள் புலிப்படை புயலாகப் புகுந்தது. கடற்புலியாக, கரும்புலியாக, வரிப்புலியாக, பெண் புலியாக எல்லாப் புலிகளும் எல்லா முனைகளிலும் எதிரியுடன் மோதின. பூநகரி கூட்டுப்படைத்தளம் ஒரு ரணகளமாக மாறியது.

ஒவ்வொரு முனையிலும் கடும் சண்டை மூண்டது. ஒவ்வொரு முனையிலும் ஒவ்வொரு தளபதிகள் முன்னின்று வழிநடத்த, புலிப்படை வீரர்கள் முன்னேறிப் பாய்ந்தனர். வீராவேசத்துடன் போரிட்டனர். ஒவ்வொரு முனையிலும், ஒவ்வொரு அத்தியாயமாக, ஒப்பற்ற வீரகாவியம் படைக்கப்பட்டது.

எதிரிப் படையணி சீர்குலைந்தது. சிதறி ஓடியது. சிதைந்துபோனது எதிரியின் பாசறை, எதிரியின் கல்லறையாக உருமாற்றம் எடுத்தது.

சிங்கள இனவாத அரக்கர் சேனையின் ஆயிரம் தலைகள் உருண்டன. அதிலிருந்து பிரவாகம் எடுத்த இரத்த ஆறு யாழ். நீரேரியைச் செங்கடல் ஆக்கியது.

அந்தக் காலத்தில், இந்தக் கடற்பரப்பில் சிங்கள இனவாத அரக்கர் படையின் ஆதிக்கம் இருந்தது. அப்பொழுது எல்லாம் இந்தக் கடலில் தமிழனின் இரத்தம் ஆறாக ஓடியது.

அன்று அந்த அரக்கர் படை கிளாலிக் கடலில் நரவேட்டை ஆடியது. வாள் தீட்டி வந்து இரத்தப்பலி எடுத்தது. இரவில், நடுநிசி மௌனத்தில், உடல் உறையும் குளிரில், உயிரைக் கையில் பிடித்தபடி பயணம் செய்த எமது மக்களை வழிமறித்து வெறியாட்டம் ஆடியது. அப்பாவிகள் என அவலக் குரல் எழுப்பி, கைகூப்பிக் கும்பிட்டு, உயிர்ப்பிச்சை கேட்டவர்களைக் கண்டதுண்டமாக வெட்டிச் சரித்தது.

அன்று எமது மக்களின் மரண ஓலம் பூநகரி வானைப் பிளந்து அதிர்ந்தது. அந்தச் சாவோலம் கேட்டு, சதிராடி மகிழ்ந்த அரக்கர் படை பூநகரி மண்ணில் பிணங்களாய் விழுந்தனர்.

பழிக்குப்பழி எடுத்து பகைவனைக் கொன்றழித்து, பகைமுடித்த எமது வீரமறவர்களின் வெற்றி முழக்கம் இன்று பூநகரி வானில் அதிர்ந்தபடி இருக்கிறது.

பூநகரிப் பெரும் சமர் எதிரியை நிலைகுலைய வைத்தது. அரச படைத் தலைமையை அதிரவைத்தது. இராணுவவாதிகளை தலைகுனிய வைத்தது. சிங்களப் பேரினவாதப் பேய்க்கு முண்டுகொடுத்து நிற்பவர்களை திண்டாடச் செய்தது. போர்க்கலையில் எவரும் புலிகளுக்கு நிகரில்லை என உலகத்தாருக்கு உணர வைத்தது.

பூநகரியில் திக்குளித்து, புலிகள் இயக்கம் புதிய பலத்தோடு எழுந்தது. விசைப் படகுகள், டாங்கிகள், பீரங்கிகளுடன் என்றுமில்லாப் பெரும் தொகையில் எதிரியின் ஆயுதங்கள் புலிகளின் கைக்கு மாறியது.

யாழ்ப்பாணத்தின் கழுத்தை இறுக்கிய எதிரியின் பிடி தளர்ந்தது. முள்வேலி முற்றுகையின் முதுகெலும்பு உடைந்தது. கடல் நீரேரியின் கடல் ஆதிக்கம் கடற்புலிகளின் கைக்கு வந்தது.

பூநகரி மண்ணில் பதியப்பட்ட இந்தச் சரித்திரச் சமர், புலிகள் இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப்போரை ஒரு புதிய படிநிலைக்கு முன்னோக்கி நகர்த்தியது. ஒரே பாய்ச்சலில், இரண்டாவது கட்ட ஈழப் போர் ஒரு புதிய வளர்ச்சிப் போக்கை எட்டிப் பிடித்தது. தமிழீழ தாயகத்தின் விடுதலைப் பாதைக்கு ஒரு உறுதியான அடிக்கல்லையும் நாட்டிவிட்டது.

இந்த மாபெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்து, பூநகரிக்களத்தில் 458 வீர வேங்கைகள் தலை சாய்த்தனர்.

சுதந்திரத் தமிழீழத்தில், எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த இந்த மாவீரர்கள் எமது இதயக்கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

காலத்தால் செத்துவிடாது, என்றென்றும் சரித்திரமாய் வாழும் இந்த வரலாற்று நாயகர்களை தமிழீழ தேசம் சிரம் தாழ்த்தி வணங்குகிறது.

## மட்டுநகரில் இருந்து படையினர் வடக்கே கொண்டு வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 13

மட்டக்களப்பில் மேலும் பல இராணுவ முகாம்களில் இருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டு வடபகுதிக்குக் கொண்டு வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் வாபஸ் பெற முகாம்களில் ஸ்ரீலங்கா அதிரடிப் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, பாலையடி வெட்டை, மக்றோச் சந்தி, காக்காச்சோட்டை, பதுளைச் சந்தி, நுவலங்கா, சின்ன வத்தை, பக்கியெல்ல ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்து துருப்புகள் வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் உள்ள இராணுவ நிலைகளைப் பலப்படுத்தவென படையினர் மட்டக்களப்புப் பகுதியில் இருந்து வாபஸ் பெறப்படுவதாகவும்—

பெருமளவு முகாம்கள் விசேட அதிரடிப் பொலிஸிடம் கையளிக்கப்படும் என்றும் மட்டக்களப்பு இராணுவ தலைமையகம் தெரிவிக்கின்றது. (த-எ)

## ஜெரி டி சில்வாவும் கடும் போக்காளராம்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியாகப் பதவி யேற்கவிருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவும் ஒரு கடும் போக்காளர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதுவித முரண்பாடுகளும் இன்றி சகல விதத்திலும் ஒத்துப் போகக்கூடிய தன்மை வாய்ந்தவரான புதிய தளபதி — இராணுவ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுவார் என்று ஸ்ரீலங்கா அரச தரப்பில் கூறப்படுகின்றது.

தற்போது இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவதற்கு ஜெரி டி சில்வாவைத் தவிர வேறு எவரும் ஆளுமை நிறைந்தவராக இராணுவத்தில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## வசதி குறைந்த பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பு

### மகளிர் அபிவிருத்தி நிதியம் ஏற்பாடு

மகளிர் அபிவிருத்தி நிதியம் வருமான ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நாவாந்துறை வசந்தபுரத்தைச் சேர்ந்த 25 பெண்களுக்கு கிடுகு பின்னுவதற்கான தென்னை ஓலைகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் ரூபா செலவில் பனையில் இருந்து இவை தருவிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பெண் ஒருவர் சராசரி 50 ரூபா வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கும். இத்திட்டம் வெற்றி அளிக்கும் பட்சத்தில் மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். (த-162)

## வட.-கிழக்கு யுத்தத்தை நடத்த விசேட சபை அமைக்குக!

### சு. க. எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிச. 13

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்த விசேட சபை ஒன்று ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அந்தச் சபையில் அங்கம் வகிக்க வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார் சு. க எம். பியான ஜினதாச நியதபால.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

மாகாணசபை முறையை நாம் ஒழிக்கவேண்டும் அதற்காகச் செலவிடப்படும் பணத்தை யுத்தத்துக்காக செலவிட வேண்டும். யுத்தம் ஒன்றை நடத்துவதாயின் அதை உரியமுறையில் செய்ய வேண்டும். மாகாணசபையால் விரயமாகும் பணம் யுத்தத்துக்கு செலவிடப்பட வேண்டும்.

நாம் எமது சம்பளத்தை ஆறுமாத காலத்துக்கு யுத்தத்துக்காக தியாகம் செய்ய தயார், அரசும் அப்படிச் செய்ய வேண்டும் என்றார்.

## ஜனாதிபதிப் பதவிக்கும் பல்கலை. தகுதி வேண்டும்

### மக்கள் ஐக்கிய முன்னணி கோரிக்கை

கொழும்பு, டிச. 13

பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது அதற்கு சமமான தகுதியுடையவர்கள் மட்டுமே ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவிக்கு போட்டியிடக்கூடியதாக அரசமைப்பு திருத்தப்பட வேண்டும்.

மக்கள் ஐக்கிய முன்னணி இந்த யோசனையை நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் சம்பந்தமாக திருத்தங்களைச் சிபார்சு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்திருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும்—

நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்திடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும்—

மக்கள் ஐக்கிய முன்னணி சமர்ப்பித்துள்ள இன்னொரு யோசனையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்றமே புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் இன்னொரு யோசனை தெரிவிக்கிறது (த-எ)

## சுகாதாரத் திணைக்களத்திற்கு 4ஆம் கந்தாய மருந்துவகை அனுப்பி வைக்கப்படவில்லை

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு இவ்வருட நான்காவது கந்தாயத்திற்கு தேவையான மருந்து வகைகள் இதுவரை கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கான 4 ஆம் கந்தாய மருந்து வகைகளை பெற்று கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கு ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. எனினும் கப்பல் வசதிகள் இல்லாததினால் மருந்துகள் இதுவரை இங்கு எடுத்துவரப்படவில்லை என்று யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மருந்துகள் வந்து சேராததால் யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்திய சாலைகள், அரச மத்திய மருந்துச் சாலைகள் ஆகியவற்றில் பலத்த மருந்து தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-135)

## 38 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்

மேற்கிந்திய நகரமான புனேயில் நேற்று முன்தினம் நடந்த ரயில் - பஸ் விபத்து ஒன்றில் 38 சிறுவர்கள் கொல்லப்பட்டனர். பாடசாலை பஸ் ஒன்று புகையிரதத்துடன் மோதிய போதே இவ்விபத்து ஏற்பட்டது. (க)

## இடம்பெயர்ந்த சுகாதார அலுவலர்களை தீவகம் திரும்பப் பணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 13

தீவுப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து சென்றுள்ள பிராந்திய சுகாதார பகுதி உத்தியோகஸ்தர்களை மீண்டும் தங்கள் பழைய இடங்களுக்குச் சென்று கடமையேற்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் இது தொடர்பான பணிப்புரையை யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் மூலமாக விடுத்துள்ளார்.

தீவகப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வேறு நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது முன்னைய இடங்களுக்குத் திரும்ப வசதியாக அவர்கள் தற்போது கடமை ஆற்றும் நிறுவனங்கள் அவர்களை விடுவித்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். மேற்படி ஊழியர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய சுற்று நிருபம் ஒன்றும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் நூறு சுகாதார உத்தியோகஸ்தர்கள் தற்சமயம் குடாநாட்டில் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (த-5-117)

## நாளை

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும்; கலாநிதி இ. பாலசுந்தரத்தின் தயாரிப்பு நெறியாள்கையில் உருவான ''சத்தியவான் சாவித்திரி'' இசை நாடகம் நாளை செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

## இன்று

பூநகரி கூட்டுப்படைத் தள தகர்ப்பு வெற்றியை நினைவு கூரும் முகமாகவும், போராளிகளின் நலம் வேண்டியும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோயிலில் விசேட அபிஷேகம் பிரார்த்தனை ஆகியவை இடம்பெறும். (த)

★ ★ ★

திருநெல்வேலி ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலையின் பாலர் கண்காட்சி இன்று திங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை மேற்படி பாடசாலையில் நடைபெறும். (த-111)

## பூநகரியில் புலிகளின் போர்த்திறன்

பூந கரியில் புலிகளின் போர்த்திறன்,
புல்ல ரிக்குமோர் வல்லமை நேர்த்திறன்
ஆன பதிலடி அதிரடி மின்னடி
ஆள லாமென் றோர்க்கொரு பேரிடி
இந்தப் பேரிடி தந்த அதிர்ச்சியில்,
ஏங்கிச் சிங்களம் குழம்பிக் கலங்குது
கடலிலும் நிலத்திலும் புலிகள் 'தவளையாய்(க்)'
கனன்று தத்தி மிதித்தும் பாய்ந்ததும்,
படர்ந்து விரிந்த எதிரியின் படைத்துறைப்
பாசறை அனைத்தும் நொடியில் அழித்ததும்,
எழுந்த எங்கள் புலிகளின் உறுமலில்
ஏங்கிப் படையினர் ஓட்டம் எடுத்ததும்,
விழுந்த பிணங்களை, உரிந்த [illegible]
விட்டுக் கெட்டவர் தொட்டுக் கலைந்ததும்,
வெட்கம் வெட்கம் வெட்கமென் றேசுதே,
வேதனை தெற்கிலே வெம்பலாய் விழுது
கவச வாகனம் உந்து படகுகள்,
கடற்படை ஆயுதம் கோடி கோடியாய்
எவரும் எண்ணா வகையில் எடுத்ததை
எண்ணி எண்ணி உலகமே வியக்குது
இந்தச் சாகசம் எப்படி நடந்தது?
என்ன டா இது அதிசயம் என்றுமே
சிந்தை கலங்கியே ''சிசிலும்'' விலகினார்
ஸ்ரீலங் காவில் அனைவரும் நடுங்கினர்
எந்தச் சத்தியும் இனியெமை வெல்லுமா?
எங்கள் உறுதிக்கு முன்செலு தும் செல்லுமா?
விந்தை புரியும் தலைவனின் ஆணையில்
வீர சுதந்திரம் வெல்லுவம் நிச்சயம்

— முருகையன்.

## வரவேற்பு விழாவில் புதுவை இரத்தினதுரை:

## நாமார்க்கும் குடியல்லோம் என்று செயலில் காட்டிய ஆதீன முதல்வர்

### இந்தியாவில் புலிகளின் அந்தஸ்தை உயர்த்தினார்

யாழ்ப்பாணம், டிச. 13

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன்தான் எமது நல்லை ஆதீனம் நடைபெறுகிறது. இந்தியாவில் தலயாத்திரையை மேற்கொண்ட போது நல்லை ஆதீன சுவாமிகள் பத்திரிகையாளரும், பிறரும் கேட்ட கேள்விகளுக்கு இவ்வாறு பதிலளித்தார், இப்பதிலால் இந்தியாவில் எமது அந்தஸ்து மேலும் உயர்ந்தது.

இது மட்டும் அல்ல. கொழும்பில் தமக்கு விருப்பம் இல்லாத ஓர் அரசியல் பெரும் புள்ளியைச் சந்திப்பதை சுவாமிகள் தவிர்த்தார்.

இவற்றின் மூலம் சுவாமிகள் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற பதிகத்துக்கு அமைவாக செயற்பட்டு எமது மண்ணின் பெருமையை உயர்த்தியுள்ளார்.

நல்லை ஆதீன பராமரிப்பு நிதியத்தின் சார்பில் நல்லை ஆதீன முதல்வருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் சிறப்புரை ஆற்றிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் விழா நடைபெற்றது.

அருட்திரு. பிரான்சிஸ் யோசெவ் அடிகளார் தமது ஆசியுரையில், இந்து மதத்தின் உயர்வுக்கு ஊன்றுகோலாக உள்ள ஆதீனத்தின் செயற்பாடுகளுக்கு மக்கள் பங்காற்ற வேண்டும்— என்று கூறினார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசும் போது கூறியதாவது:

எமது கடமைகளைச் சமூகக் கடமைகள் ஆக்குவது இன்றைய காலத்தில் மிக முக்கியமாகும். மக்களுக்குப் பணிசெய்யாத சமயம் எதுவும் சமயம் ஆகாது. எனைய மதத் தாபனங்கள் போன்று ஆதீனமும் சிறந்த பணியாற்ற வேண்டும்.

இன்று ஆரம்பித்துள்ள அறக்கொடை மூலம் இதற்கு வழி பிறக்கும். அதற்கு மக்கள் மென்மேலும் மனம் உவந்து உதவ வேண்டும்.

நல்லை ஆதீன பராமரிப்பு நிதியத்தின் சார்பில் ஆதீன வைப்பு நிதியாக சுமார் இரண்டு லட்சம் ரூபாவுக்கான காசோலை துர்க்கா துரந்தரியால் நல்லை முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

முன்னதாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், அருட்கவி விநாசித்தம்பியும் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ், இரு சி. வேலாயுதம், அருட்கவி விநாசித்தம்பி, ஆர். வெங்கட்ராமன், பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் உட்படப் பலர் உரையாற்றினர்.

நல்லை முதல்வர் பதிலுரை வழங்கினார். வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (க-111)

நீங்கள் தேசத்தை நேசிப்பது உண்மையானால் பசிய மரங்களில் பாசத்தை வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரி கூட்டுத்தள ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டையில் பல நூற்றுக்கணக்கான உருவங்கள் பொருத்தமான நிலைகளில் வைக்கப் பட்டுள்ளன.

ஸ்ரீ லங்கா இராணுவத்தின் நெஞ்சில் கால் மிதித்தவாறு விடுதலைப் புலிவீரர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைக்கும் காட்சி பார்ப்போரை சிலிர்க்க வைக்கிறது.

கிளாலிக் கடற்பரப்பில் சிங்களப் படையினர் தமிழர்களைக் கொன்று குவித்த படுகொலைக் காட்சி பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது அதனை பார்ப்போர் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் அட்டூழியங்களை நேரடியாகப் பார்ப்பது போல் கண்ணீர் வடிக்கின்றனர்.

இதேவேளை வடமராட்சி மற்றும் அச்சுவேலி பகுதிகள் மஞ்சள் சிவப்பு கொடிகளாலும் விடுதலைப் போராட்டத்தை நவலியுறுத்தும் கொடிச் சீலைகளினாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன வீதி ஓரத்தில் 15 க்கும் மேற்பட்ட பெரிய அளவிலான படங்கள் வைக்கப்பட்டுள்ளன அவற்றில் இராணுவத்தினர் பொது மக்கள் மீது மேற்கொண்ட அட்டூழியங்கள் தமிழ் மக்களை துன்புறுத்தும் சித்திரங்கள் அதைத் தொடர்ந்து விடுதலைப் போராட்டத்தின் முன்னெடுப்புக்கள் போன்றவை சித்திரிக்கப்பட்டுள்ளன.

அலங்காரப் பந்தல் ஒன்றில் பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஒ-11)


## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீதசபை தேர்வுகள் - 1994

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் 1993-12-15 புதன்கிழமை தொடக்கம், சபைப் பணிமனையில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத் தருகிறேன்.

விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-

தி. பெரியதம்பி.
யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
(யாழ்ப்பாணம்:01)
வடஇலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்.

(சி-6703)


## மரண அறிவித்தல்கள்

### இராமு கந்தப்பு சண்முகம்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 625/5. ஆஸ்பத்திரி வீதியில் வசித்தவருமாகிய இராமு கந்தப்பு சண்முகம் 11-12-1993 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், யோகேஸ்வரியின் அன்புத் தந்தையும், செல்வராசாவின் அன்பு மாமனாரும், ஞானகுமார், ஞானவதனி, செந்தில்ரூபன், குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (12-12-1993) கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. செல்வராசா
(மருமகன்)

625/5. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(28419)

### கணபதிப்பிள்ளை இராஜகோபால்

(வேலணை மேற்கு — 7)

தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட கணபதிப்பிள்ளை இராஜகோபால் அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று 13-12-1993 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காகப் பூதவுடல் காலை 9-00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி தி. இராஜகோபால்
(மனைவி)

ஸ்ரேசன் வீதி,
கொக்குவில்.
(28417)

### இராமு கனகரத்தினம் ஐயர்

இராமு கனகரத்தினம் ஐயர் காலமானார்.

அன்னார் உரும்பராய் தெற்கைச் சேர்ந்தவரும் முன்னாள் கொழும்புத்துறை கிழக்கு முத்துமாரியம்மன், ஐயனார் கோவில் பூசகரும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரியின் தந்தையாரும், பாலசந்திரனின் (டுபாய்) மாமனாரும், காலஞ்சென்ற கனகம்மா, நவரத்தினக் குருக்கள், காலஞ்சென்ற திலகர்மா, தையலம்மா, பார்வதி அம்மா ஆகியோரின் சகோதரரும் கந்தையா, சின்னத்துரையின் மைத்துனரும், ஐயாத்துரையின் சகலனுமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று 13-12-93 (திங்கட்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று வேம்பன் மயானத்தில் சமாதியடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
நாகேஸ்வரி
(மகள்)

உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.
(28422)

### க. சரவணமுத்து

(இளைப்பாறிய அதிபர்)

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலையின் இளைப்பாறிய அதிபர் க. சரவணமுத்து அவர்கள் சிவபதமடைந்து விட்டார்.

இவர் நீலாயதாக்ஷியின் அன்புத் துணைவரும், முருகையா (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கந்தராசா (அரசு அச்சகக் கூட்டுத்தாபனம்), முத்தாச்சி, கமலாட்சி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சந்திராதேவி, இ. சிவானந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், இந்துமதி, சிவமதி, பரணவன், சரவணன், மேகலா, செவ்வேள், சேயாள், சக்தி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 93-12-13 நண்பகல் 12 மணிக்கு கல்வயலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுக் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
ச. முருகையா
(மகன்)

கல்வயல்,
சாவகச்சேரி,
(28420)

## மாணவருக்கு மண்ணெண்ணெய்

வலிகாமம் தெற்கு, டிச. 13

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு பரீட்சையை முன்னிட்டு நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டது.

கற்கை ஆண்டு பரீட்சை எழுதும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு ஒரு லீற்றர் வீதமும்—

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா இரண்டாம், மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இரண்டு லீற்றர் வீதமும்—

இறுதி ஆண்டு மாணவர்களுக்கு மூன்று லீற்றர் வீதமும் வழங்கப்பட்டது ஒரு லீற்றர் முப்பது ரூபா வாக வழங்கப் பட்டது. (அ-152)

## பாட்டாளி மக்கள் கட்சி உடைவதற்கு ஈழப் போராட்ட விவகாரமும் காரணம்

சென்னை, டிச. 13

பாட்டாளி மக்கள் கட்சி பிளவுண்டதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையும்—தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட விவகாரமும்—ஒரு காரணமாக அமைந்துள்ளதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து ஒதுங்கிக் கொண்டு காங்கிரஸ் மற்றும் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து அதன் மூலம் ஜெயலலிதாவை ஆட்சி பொறுப்பில் இருந்து அகற்ற வேண்டும் என்று பண்ருட்டி இராமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

டாக்டர் ராமதாஸோ, ஜெயலலிதா விஷயத்தில் சற்று பரிவாக நடந்துகொள்கிறார்.

இலங்கையில் தமிழருக்கு என ஒரு பகுதியைப் பிரித்து தமிழீழம் ஒன்றை அமைத்துத் தரவேண்டிய அறவழிப்பட்ட பொறுப்பு இந்திய மத்திய அரசுக்கு உண்டு என்றும்—

அத்தகைய ஒரு நாட்டைப் பெறத்தான் விடுதலைப் புலிகள் போராடி வருகின்றார்கள் என்றும்—டாக்டர் ராம்தாஸ் கூறுகின்றார் விடுதலைப் புலிகளின் இப்போராட்டத்தை விடுதலைப் போராட்டம் என்றும் டாக்டர் ராம்தாஸ் வர்ணித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு அவர்களின் கொள்கையில் வெற்றிபெற துணை புரியவேண்டும் என்றும் டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலையையும் விடுதலைப் புலிகளையும் தொடர்பு படுத்தக்கூடாது என்றும் டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து பண்ருட்டி இராமச்சந்திரன் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து அக்கட்சி பிளவுண்டது தெரிந்ததே.

பாட்டாளி மக்கள் கட்சி பொதுச் சபையில் உள்ள 843 உறுப்பினர்களில் 810 பேர் பண்ருட்டியை வெளியேற்ற வாக்களித்தனர் என்று டாக்டர் ராம்தாஸ் கூறுகின்றார். (ஒ-எ)

## கிளாலி பஸ் சேவை நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ் - கிளாலி போக்குவரத்தில் ஈடுபடும் முதல் பஸ் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் நேரம் தற்போது நண்பகல் 12 மணியாக மாற்றப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 30 மணி வரை கிளாலிக்கான பஸ்கள் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சேவையில் ஈடுபடுத்தப் படும்.

முன்னர் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து முதல் பஸ் புறப்படும் நேரம் காலை 10-30 மணியாக இருந்தது. தற்போதைய காலநிலை காரணமாக கிளாலி செல்லவென யாழ். பஸ் நிலையத்திற்கு வரும் பயணிகளின் வருகை தாமதமாக இருப்பதால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத் தலைவர் திரு. அ. அமிர்தராஜா உதயனுக்குத் தெரிவித்தார். (அ-162)

## குடாநாட்டை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றோம். ஆனால் சமர் நடந்த மூன்று நாட்களாக எமக்கு உணவு இல்லை நீரில்லை.

### தாகத்துடன் ஆயுதங்களை சுமந்தோம்

காயமடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளை அப்புறப்படுத்த எத்தனை ஆயிரம் போராளிகள் எமக்குத் தேவை, தண்ணீர் தாகத்துடன் நின்று இராணுவத்தினரிடம் கைப்பற்றிய ஆயுதங்களை சுமந்து சென்றோம். எமது அடுத்த சந்ததி அவற்றைத் சுமந்து போராடும் என்ற நம்பிக்கையோடு அவற்றை சுமந்து கொண்டு வந்தோம்.

மூன்று நாட்கள் அங்கு நின்று சண்டை செய்தோம், அந்த இடத்தை விட்டு நாம் நகர்ந்த பின்பே இராணுவம் அங்கு தரையிறங்கியது.

பல மாவட்டங்களைச் சேர்ந்த எமது தளபதிகள் சமரில் பங்கேற்றிருந்தனர். அந்த வேளை மக்களை அழிக்கும் நோக்கோடு எதிரி பலாலி, ஆனையிறவு மண்டைதீவு போன்ற ஏதாவது ஒரு முகாமில் இருந்து வெளியேறிவந்தால் அதைத் தடுக்க போராளிகள் இல்லை, நாம் அங்கிருந்து பின்வாங்க வேண்டி வந்த சூழ் நிலைக்குக் காரணம் எமது ஆட்பலம் போதாதது தான்

### களஞ்சியத்தில் ஆயுதங்கள்

எதிரியிடம் கைப்பற்றிய பெருந் தொகையான ஆயுதங்கள் எமது களஞ்சியத்தில் உள்ளன. அவற்றை ஏந்த வேண்டிய பொறுப்பும் கடமையும் இங்குள்ள அனைவருக்கும் உண்டு — என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி பேசுகையில் தெரிவித்ததாவது:-

எமது போராட்டத்தின் மீது உலகத்தின் கவனம் திரும்பியிருக்கிறது. ஆனால் உலகத் தலையீடு ஒன்று இங்கு ஏற்பட எமது தலைமை சந்தர்ப்பமளிக்கவில்லை

### எந்தத் தளத்தையும் தகர்க்க முடியும்

எமது மக்கள் போராட்டத்தின் மீது ஓர் தெளிவான பார்வையை — நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு அயராது உழைக்க வேண்டும். எமது போராட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலமே சுதந்திரத்தையும் நிம்மதியையும் அடையலாம். இங்குள்ள எந்த தளத்தையும் எம்மால் தகர்த்தெறிய முடியும் — என்றார்.

தீவகக் கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடந்த நேற்றைய கூட்டத்தில் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் தணிகைச் செல்வி, மகளிர் படையணி தாக்குதல் பிரிவு பொறுப்பாளர்களில் ஒருவரான செல்வி ராதா ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-5)

## இரணைமடு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரிகள் சொல்கிறார்கள். வேறு சிலர் சொல்கிறார்கள் அந்தச் சண்டை 10 ஆம் திகதி மாலையே தொடங்கிவிட்டதாக.

ஆனால் எமது போராளிகளுக்கோ அந்தச் சண்டை நான்கு மாதங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது. எங்கள் தலைவருக்கும் வேவு அணியினருக்குமோ அந்தச் சண்டை ஒரு வருடத்துக்கு முன்னரே தொடங்கிவிட்டது. இன்னும் சொல்லப்போனால் நாம் ஆனையிறவில் வெல்ல முடியாமல் திரும்பி வந்தபோதே எமது தலைவருக்கு இந்தச் சண்டை தொடங்கிவிட்டது.

ஒவ்வொரு வெற்றிகளில் இருந்தும், எமது தவறுகள், அனுபவங்களில் இருந்தும் பாடம் படித்துக் கொண்டு முழுக்க முழுக்க எம்மையே நம்பி - எமது போராளிகளையே நம்பி இந்தப் பெரும் சமருக்கான திட்டம் எங்கள் தலைவர் அவர்களால் தீட்டப் பட்டது

கிளாலிக் கடலிலே ஸ்ரீலங்கா கடற்படையினரால் எமது மக்கள் கொல்லப்படும் செய்திகளைக் கேட்ட ஒவ்வொரு நாளும் எமது போராளிகள் துடித்தார்கள். எமது மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் தாக்குதலைத் காமதப்படுத்திக் கொண்டிருக்கிறோம் எனத் தவித்தார்கள். அந்தத் தவிப்பே இந்தத் தாக்குதலில் அவர்களை உந்தித் தள்ளியது.

### மன உறுதி வெற்றி தரும்

இந்தப் பெரும் சமர் எமக்கு எதை உணர்த்தி நிற்கிறது? ஒரு சிறிய படையினரான நாம் மன உறுதியை வளர்த்து அதன் மூலம் எதிர்ப்பைக் காட்டுவோமானால் எந்தப் படையணியையும் வெல்லலாம் என்ற உண்மை இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

புலோப்பளைச் சமரில் நாம் பெற்ற வெற்றி இந்தப் பூநகரித் தாக்குதலுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்தது. அந்த வெற்றி எமதுபோராளிகளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது எமது போராளிகளிடம் இருக்கும் நம்பிக்கையை எமது மக்கள் அனைவரும் பெறுவார்களானால் நாம் எதிர்பார்க்கும் தமிழீழத்தின் சுதந்திர நாள் மிக அண்மித்ததாக இருக்கும்.

இந்தச் சமரில் நாம் 500க்கு மேற்பட்ட போராளிகளை இழக்க வேண்டி வரும் என தாக்குதல் தொடர்பான திட்டங்களைத் தீட்டியபோது எமது தலைவர் எம்மிடம் கூறினார். இழப்புக்களை படிக்கற்களாக அமைத்துக் கொள்வது விடுதலைப் புலிகளின் பொறுப்புமட்டுமல்ல மக்களின் பொறுப்புந்தான்

பூநகரி முகாமை வெல்வோம் என்ற குறிக்கோளுடன் நாம் சென்றோம். வென்றோம். திரும்பி வந்தோம். அதற்கு அடுத்ததான குறிக்கோளுடன் நாம் செல்வதாக இருந்தால் எமது அமைப்பு அடுத்த கட்ட இராணுவ வளர்ச்சிக்குச் செல்லவேண்டும்.

எமது பரிமாண வளர்ச்சி இனத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியாக மாறும்போது நாம் வெல்லும் பகுதிகள் எமது மக்கள் வாழும் பகுதிகளாக ... விரைவில் வர ... அனைவரும் ... இருங்கள்— என்றார். (அ-5)

## வெற்றி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று நடந்தன

யாழ்ப்பாணம், டிச. 13

பூநகரி கூட்டுத்தளம் மீதான 'தவளை' தாக்குதல் நடவடிக்கையின் வெற்றி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று குடாநாடு எங்கும் சிறப்புற நடைபெற்றன. நேற்று நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளிலும் மக்கள் முனைப்புடன் கலந்து கொண்டனர்.

யாழ். நகரில் ஆரிய குளம் சந்தியில் இருந்து நேற்றுப் பிற்பகல் பாண்ட் வாத்திய அணியினர் யாழ். பல்கலைக் கழகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

மகளிர் அமைப்பின் கடற்புலிகள் அணியினரும், பாண்ட் வாத்திய அணியினரும், யாழ். கோட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் அந்த ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

சுன்னாகம் பகுதியில் இருந்து நேற்று பிற்பகல் புறப்பட்ட சைக்கிள் பேரணியும் யாழ் பல்கலைக் கழகம் வரை இடம் பெற்றது.

யாழ். பல்கலைக் கழகப் பகுதியில் அமைக்கப்பட்ட உயிர்நீத்த வேங்கைகளின் உருவப்படங்கள் வைக்கப் பட்ட நினைவுக் கூடம் நேற்று முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்த மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகைச்சுடர் ஏற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர். மக்கள் பெரும் எண்ணிக்கையில் அங்குசென்று அஞ்சலி செலுத்தினர். (ஒ-5--15-17-111-162)

## மட்டுவிலில் சிறப்பாக நடந்த வெற்றி விழா

சாவகச்சேரி டிச 13

பூநகரி வெற்றி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்றன.

பூநகரி தாக்குதலில் மாவீரர்களான 458 பேரின் உருவப் படங்கள் நீண்ட பெரிய பந்தலில் வைக்கப்பட்டு மலரஞ்சலியும் தீபாஞ்சலியும் செய்யப்பட்டன. அங்கு போராளிகளினது அணி வகுப்பு மரியாதையும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி தாக்குதல் சம்பவங்களை சித்திரிக்கும் படங்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன இவற்றைப் பார்வையிட மக்கள் கூட்டம் திரண்டு வந்தது.

இதனிடையே வேரற்கேணி கந்தசாமி கோயில் முன்பாக இருந்து மக்கள் மங்கள இசையுடன் அணி திரண்டு கூட்ட மைதானத்தை வந்தடைந்தனர் வீதிகள் தோறும் மிக அழகாக அலங்காரம் செய்யப் பட்டிருந்தன இடையிடையே தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மைதானத்துக்கு வந்தவர்கள் அனைவரும் கற்கண்டு வழங்கி அன்புடன் வரவேற்கப்பட்டனர் கூட்டம்தொடங்கியதும், வானில் 15 க்கும் மேற்பட்ட வெளிச்சக் குண்டுகள் பறக்க விடப்பட்டன. (ஒ-ரி)

## மருத்துவ உபகரணங்கள் விரைவில் வரும்

பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய மருத்துவ உபகரணங்களின் ஒரு தொகுதியை விரைவில் வடபகுதிக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நேற்று கொழும்பில் இருந்து மார்கோ கப்பலில் யாழ்ப்பாணம் திரும்பிய யாழ். போதனா வைத்திய சாலை நிர்வாக அதிகாரி ஆர். பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த மருத்துவ உபகரணங்கள் வாதுவ கப்பல் மூலமே ஏற்றி வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

ஆனால் வாதுவ கப்பல் கொழும்பு செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் மருத்துவ உபகரணங்களை ஏற்றி வருவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-17)

## பருவமழை -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயலகத்துக்கு ஏற்பட்ட சேதத்துக்காக பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் உடனடியாக வருத்தம் தெரிவித்தார். ஆனால் பாதுகாப்புக்காக மக்கள் ஒதுங்கியிருந்த கத்தோலிக்க தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி அவர் இன்னும் ஒன்றுமே கூறவில்லை.

படையினர் வேண்டும் என்றே தேவாலயத்தை இலக்கு வைத்துத் தாக்கினர் என்று ஆயர் சௌந்தரநாயகம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுப்பர் சொனிக் போர் விமானங்களின் சப்தம் தமிழரின் மனதில் அச்சத்தை எழுப்புவதாகவும் — விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே வெகுவிரைவில் இன்னோர் மோதல் நடக்கும் என்றும் பலர் எதிர் பார்க்கின்றனர்,

ஜனவரியில் பருவமழை முடிந்துவிடும் அதன்பின்னர் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்துவர் என்று தெற்கில் இராணுவ நிபுணர்கள் பலர் நம்புகின்றனர்.

விடுதலைப் புலிகள் இராணுவத்தின் தாக்குதலுக்குத் தாம் தயார், இராணுவத்தை ... தம்மால் முடியும் என்று காட்டியுள்ளனர். — இப்படி அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## வலிகாமம் மேற்கு பகுதியில் 2,600 குடும்பங்கள் பாதிப்பு

வலிகாமம் மேற்கு, டிச. 13

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக பிரிவில் சுமார் 2,600 குடும்பங்கள் அண்மையில் பெய்த பெருமழையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 200 மண் குடிசைகள் முற்றாக சேதமடைந்து உள்ளன சுமார் 100 கல்வீடுகள் மரங்கள் வீழ்ந்ததனால் சேதமடைந்துள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இருந்து சுமார் 2,600 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்படைந்து பொது இடங்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திரு. இ. இளங்கோவன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை அவ்வப் பகுதி கிராம உத்தியோகத்தர்களுடன் சென்று பார்வையிட்டு இவர்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். (அ-175)

## யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்றில் மொத்தம் 180 வழக்குக்கள் 58 நாட்களில் விசாரணைக்கு

யாழ்ப்பாணம், டிச 13

யாழ்ப்பாணம் மாவட்ட தமிழீழ நீதிமன்று ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து சென்ற வெள்ளிக்கிழமை வரையிலான 58 நாட்களில் மொத்தம் 88 குற்றவியல் வழக்குகளும், 92 குடியியல் வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப் பட்டிருக்கின்றன.

71 குற்றவியல் வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. குற்றவியல் வழக்குகளில் களிப்பு விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்குகளே அதிகம். கள்ளச் சாராய வழக்குகள் 24 விசாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு 3 லட்சத்து 11 ஆயிரத்து 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை குறிப்பிட்ட காலப்பகுதியில் 92 குடியியல் வழக்குகளும் யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன. குடியியல் வழக்குகளில் 31 குடும்ப வழக்குகள், 30 காணி வழக்குகள் 23 பண மோசடி வழக்குகள், 08 தொழிற் பிரச்சினை வழக்குகள் என்பன அடங்கும் இவ் வழக்குகள் அனைத்திற்கும் தீர்ப்புகள் வழங்கப்பட்டன. (அ-162)


## விஷேட பூசையும் பஞ்சமுக அர்ச்சனையும்

இடம்: வெய்யிலுகந்த விநாயகர் ஆலயம் நாயன்மார்க்கட்டு

காலம்: 13-12-93 நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்

பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு வெற்றியை வாழ்த்தியும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆசி வேண்டியும், மேலும் பல வெற்றிகள் பெற பிரார்த்தித்தும் விஷேட பூசையும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறும்.

சிவஸ்ரீ. பா. விக்கினேஸ்வரக் குருக்கள்

ஸ்ரீ வெய்யிலுகந்த விநாயகர் தேவஸ்தானம், நாயன்மார்க்கட்டு. (28423)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org